Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 76

10 சனிக்கிழமை பெப்ரவரி 2024

தை 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



"வெள்ளை ஈ பிரச்சினை எண்டு மருந்தடிக்க வெளிக்கிட்டால், அது இன்னும் பிரச்சினையாக் கிடக்கே"



# இந்தியாவுடன் நெருக்கம்; தரைவழிப்பாதை விரைவில்

## ஆஸியில் வைத்து தெரிவித்தார் ரணில்

**கொழும்பு, பெப்ரவரி 10**

**வர்த்தகப் போக்குவரத்துகளுக்காகத் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சுயஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது. எனவே, இந்தியாவுடனான தரைவழித் தொடர்பை இலங்கை வலுப்படுத்தும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

10

## தனக்காக அடிவாங்கியோரை திருப்பி அடிக்கிறார் ரணில்!

*ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 10

ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் போது 25 வருடங்களாக ரணில் விக்கிரமசிங்கவுக்காக நாம் அடி வாங்கினோம். இன்று அவர் எம்மை அடிக்கின்றார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

'ஊழல், மோசடிகளை தடுப்பதற்கு நடவடிக்கை

10

## பலாலி கிழக்கில் விரைவில் காணி விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

பலாலி கிழக்குப் பகுதியில் உள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், விரைவில் காணி விடுவிப்புச் சாத்தியமாகும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

10




## நிதிக்குழுத் தலைவராக ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, பெப். 10

அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்

10



## ஏனைய மரங்களுக்கும் படையெடுக்கிறது 'வெள்ளை ஈ'

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை காலமும் தென்னைமரத்தில் அவதானிக்கப்பட்டுவந்த வெள்ளை ஈக்களின் தாக்கம் தற்போது வேறு பயன்தரு மரங்களிலும்

10

## தென்னைக்கு அடிக்கும் 'அக்ரார்' மருந்தால் நுரையீரல் பாதிப்பு!!

*குடியிருப்புகளில் பயன்படுத்த வேண்டாம் மாவட்டச் செயலர் உத்தரவு*

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபையினரால் வெள்ளை ஈக்களின் தாக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவுள்ள 'அக்ரார்' இரசாயன மருந்தை சுகாதார நலன்கருதி குடியிருப்பு நிறைந்த

10

2023இல் யாழ். போதனாவில்

## 47 குழந்தைகள் இறந்து பிறந்தன

யாழ்ப்பாணம், பெப். 10

2023ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 47 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன என்று யாழ்ப்பா

10

## தாக்குதலுக்குள்ளான 13 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், கடந்தவருடம் தாக்குதலுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோரில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

10

## கால்நடைகள் கடத்தப்படல்: பொலிஸார் அசண்டையீனம்

*யாழ். மாவட்டச்செயலர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், பெப். 10

கால்நடைகள் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் இறைச்சியாக்கப்படுகின்றமை தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் போதாது என்றும், விரைவில் தடுப்பு

10

## யாழ். மாநகரசபையின் ஆணையாளராக கிருஷ்ணேந்திரன்



யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். மாநகரசபையின் புதிய ஆணையாளராக ச.கிருஸ்ணேந்திரன் நேற்று வெள்ளிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

கிருஷ்ணேந்திரன் பூநகரிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக முன்னர் கடமையாற்றியிருந்தார். (அ-ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கால் பதிக்கும் இந்தியாவின் அமுல் நிறுவனம்

கொழும்பு, பெப். 10

**இலங்கையில் பால் தொழிலை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணையை இந்திய அமுல் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பண்ணைகளை பார்வையிடுவதற்காக இந்தியாவின் அமுல் நிறுவனப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 31 பண்ணைகள் 28 ஆயிரத்து ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் காணப்படுகின்றன.

இந்தப் பண்ணைகளின் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களை அமுல் நிறுவன பிரதிநிதிகள் குழு ஆராய்ந்து நடைமுறைப்படுத்தவுள்ளதுடன் குறித்த 31 பண்ணைகளை அமுல் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடுவதற்கு முன்னர், பண்ணைகளின் பெறுமதியை மதிப்பிடத் தொடங்கியுள்ளதாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## இசை நிகழ்வு

யாழ்., பெப்.10

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் வழங்கும் சற்குரு ஸ்ரீ தியாக ராஜ சுவாமிகளின் இசை ஆராதனை நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

*ரணிலின் அடக்குமுறை*

# சிவில் அமைப்புகள் கூண்டோடு விலகின

கொழும்பு, பெப். 10

சிவில் சமூக வெளியைக் குறிவைக்கும் அடக்குமுறை மற்றும் ஜனநாயகமற்ற சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமை செயல்முறையிலிருந்து சிவில் சமூக அமைப்புகள் விலகுவதாக நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பகிரங்கக் கடிதமொன்றையும் இந்த அமைப்புகள் அனுப்பியுள்ளன.

இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமையின் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய மூன்றாவது தேசிய செயற்றிட்டத்தைத் தயாரிப்பதில் பங்களிக்கும் சிவில் சமூக அமைப்புகள் சிவில் கூட்டு முயற்சிகளிலிருந்து விலகுவதற்கு ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளதாக அதில் குறிப்பிட்டுள்ளன. (ஒ-இ)

# எம்முடன் தொடர்ந்து இணைந்திருங்கள்

## புலம்பெயரிகளுக்கு ரணில் ஆலோசனை

கொழும்பு. பெப். 10

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் தொடர்ச்சியாக இணைந்து கொள்ளுமாறு அவுஸ்திரேலியா வாழ். இலங்கையர்களுக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலிய பேர்த் நகரில் வசிக்கும் அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைப்பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவது மற்றும் நவீனமயப்படுத்துவது குறித்து புலம்பெயர் இலங்கையர்களுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி, அவற்றுடன் தொடர்ச்சியாக இணைந்துகொள்ளுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இதன்போது புலம்பெயர் இலங்கையர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாட்டின் முன்னேற்றத்துக்கான நீண்டகால கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் தெரிவித்தார். (ஒ-இ)

# அநுர குழுவினர் குஜராத்தில் சந்திப்பு

கொழும்பு, பெப். 10

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட பிரதிநிதிகள்குழு குஜராத் மாநில அரசாங்கத்தின் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நிறுவனத்துக்கும் பயணம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி நிறுவனம் மாணவர்களுக்கும் பயிலுநர் தொழில் முனைவோருக்கும் மதியுரைசேவைகளையும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குகின்ற மற்றும் முதலீட்டாளர்கள் ஊடாக நிதியங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற புத்துருவாக்க கேந்திரநிலையமாகவே இடையீடு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)

# பிக்கு கொலை சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப். 10



கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் பிக்கு சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம, முல்வேகம பகுதியில் வைத்தே குறித்த நபர் மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதான குறித்த நபரே கொலையாளிகள் பயணித்த காரின் சாரதியாகச் செயற்பட்டுள்ளார்.

கொலைக்காக பயன்படுத்தப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி, இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டு, கொலையாளிகள் பயணித்த காரின் சாவி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி அதிகாலையில் விகாரையில் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றது. இதில் 45 வயதான தேரர் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# போதை மாத்திரைகளுடன் ஆண், பெண் கைது

மன்னார், பெப். 10

கடற்படை மற்றும் மன்னார் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் மூலம் உயிர்கொல்லி போதை மாத்திரைகளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆண் மற்றும் பெண் என இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ஆயிரத்து 200 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. (ஒ-213)

# மரக்காலையில் கசிப்பு பெண் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 10

கோப்பாயிலுள்ள மரக்காலையில் நூதனமான முறையில் கசிப்பை உற்பத்தி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மரக்காலையினுள் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக அங்கு சென்று சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மோட்டார் வாகனத்தின் டிக்கியினுள் பொலித்தீன் பையினுள் வைத்து விற்பனைக்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றினர். கசிப்பை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மரக்காலை உரிமையாளரான 39 வயதான பெண்ணொருவரை கைது செய்தனர். (ஒ-125)

# பஸில் நாடு திரும்பியதும் தேர்தல் தொடர்பில் முடிவு

பஸில் ராஜபக்ச இன்னும் ஓரிரு நாள்களில் நாடு திரும்புவார். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் இறுதித் தருவாயிலேயே ஜனாதிபதி வேட்பாளரை பெயரிட்டோம். வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான பலம் எமது கட்சியிடம் இன்னும் உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடவுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஐந்தாறு மாதங்கள் உள்ளன, எனினும், அதுவரை காத்திருக்கமாட்டோம், பஸில் ராஜபக்ச ஓரிரு நாள்களில் நாடு திரும்புவார், அவர் வந்த பின்னர் முடிவெடுக்கப்படும்" - என்றார். (ஒ-44)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு பரவும் சூழல் 7 பேருக்குத் தண்டம்

## தலா 20 ஆயிரம் ரூபா விதிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 10**

**கொக்குவிலில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த 7 வீட்டு உரிமையாளர்களுக்குத் தலா இருபதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.**

கொக்குவில் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது தொடர்ச்சியாக நுளம்பு பெருகும் சூழலுடன் சுற்றாடலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் ஏழு பேருக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஏழு பேரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனையடுத்து அவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் ஒவ்வொருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார். (ஒ-66)




கிளிநொச்சி, பெப். 10

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தியில் இலவச மதிய உணவு வழங்கும் நிலையம் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'சிலோன் சாய்ஸ் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்தினரே பசியோடு வருபவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

திங்கள் முதல் ஞாயிறு வரை நண்பகல் 12 மணியிலிருந்து 1.30 மணி வரை குறித்த சேவை இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளனர். (ப-9)

# துப்பாக்கி, கஞ்சாவுடன் சந்தேகநபர் கைதானார்

முல்லைத்தீவு, பெப். 10

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு- விசுவமடுப் பகுதியில் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி மற்றும் கஞ்சா என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரைச் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-19)

# ஒளிபாய்ச்சி மீன்பிடி: ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 10



வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சிமீன்பிடியில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 23 வயதான மேற்படி சந்தேகநபரை உரிய சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் நகர்வுகளை நீரியல் வளத் திணைக்களத்தினர் முன்னெடுத்தனர். வடமராட்சியில் அண்மைக்காலமாக சட்டவிரோத மீன்பிடி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-27)

# பெண்ணிடமிருந்து சங்கிலி அறுப்பு!

## வவு.வில் சம்பவம்

வவுனியா, பெப். 10

கந்தபுரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் என வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

பெண்ணைப் பின்தொடர்ந்து சென்ற அவர்கள் ஏதோவொன்றை விசாரிப்பதுபோன்று பாசாங்கு செய்துவிட்டு சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-18)

# பெண்ணிடம் வழிப்பறி முயற்சி: ஏமாற்றத்தில் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10

கல்லுண்டாய்ப் பகுதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் வழிப்பறிக்கு முயன்றவர் ஏமாற்றத்துடன் தப்பியோடிய சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கல்லுண்டாய் ஊடாக மானிப்பாய் நோக்கி இளம்பெண் பயணித்துள்ளார்.

அவரைப் பின் தொடர்ந்த இளைஞன், இளம் பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுக்க முற்பட்டபோது, பெண் வேகமாக மோட்டார்சைக்கிளைச் செலுத்த முற்பட்டுள்ளார். இதனையடுத்து பெண்ணை காலால் கீழேதள்ளிவீழ்த்திவிட்டுவழிப்பறி முயற்சியை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து சிறு காயங்களுக்குள்ளான இளம்பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். (ஓ-125)




# புதினம் தெரியுமோ?

• சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே' எண்டு படிச்ச காலமெல்லாம் மலையேறிப்போய் கன காலம். இப்பவெல்லாம் 'பேமஸான பள்ளியில் சேர்த்தல் தந்தைக்கு கடனே'எண்டாகிப் போட்டுது. கம்பஸுக்கு கூட ஒருமாதிரிப் படிச்சுப் பாஸ் பண்ணி உள்ளுக்க போயிடலாம், ஆனால் தரம் ஒண்டில பிள்ளையைச் சேர்க்கிறது எண்டால் நாய்படாப்பாடு படோணும். அதுவும் யாழ்ப்பாணம் ரவுண் பக்கம் இருக்கிறவை தங்கட பிள்ளையளை இந்து ஆரம்பப் பாடசாலையிலையோ, இல்லாட்டி பொஸ்கோவிலையோ தான் சேர்க்கத்தான் கடுமையா அலுவல் பாப்பினம். ஏதாவது ஓட்டுமாட்டுச் செய்தாவது பிள்ளையளை இந்தப் பள்ளிக்கூடங்களில சேர்க்க ஓடித் திரிவினம். இந்த ரண்டு பள்ளிக்கூடத்துக்கும் கிடைக்காட்டித்தான் வேற பள்ளிக்கூடங்களில பிள்ளையளைச் சேர்க்கிறதைப் பற்றி யோசிப்பினம். ஏனெண்டால்'கொலர்சிப் எக்ஸாமில' இந்த ரண்டு பள்ளிக்கூடங்களிலையும் தான் குலை குலையாப் பிள்ளையள் 'பாஸ் 'பண்ணிறவை. ஒருக்கா பொஸ்கோவில கூடப் பிள்ளையள் 'பாஸ்' பண்ணினால், அடுத்தமுறை இந்து ஆரம்பப்பாடசாலைப் பிள்ளையள் 'பாஸ்' பண்ணிக்குவிப்பினம். இப்பிடி ரண்டு பள்ளிக்கூடத்துக்கும் தான் கடும்போட்டி.

இப்பிடியான நிலையில பள்ளிக்கூடங்களுக்கு புதுசா பிள்ளையளைச் சேர்க்கிறதில திருகுதாளம் ஒண்டும் நடக்கக்கூடாது எண்டதுக்காக இந்த வருசத்தில இருந்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் மேற்பார்வைக்குழு எண்ட ஒண்டைப் போடச்சொல்லி அரசாங்கம் அறிவிச்சிருக்கு. அந்தச் சுற்றுநிருபத்தின்படி, வடக்கு மாகாணத்திலையும் மேற்பார்வைக் குழுக்களை பணிப்பாளர் நியமிச்சிருக்கிறாராம். ஆனால் யாழ்ப்பாண வலயத்தில மட்டும்தான் இந்தக் குழுக்களை அவர் போட்டிருக்கிறார். இப்ப அந்தக் குழுக்களைப் போட்டது பெரும் பிரச்சினையா மாறியிருக்கு. இந்து ஆரம்பப்பாடசாலையின்ர மேற்பார்வைக்குழுவின்ர தலைவரா, அந்தப் பள்ளிக்கூடத்துக்கு எந்த பொஸ்கோ பள்ளிக்கூடம் போட்டியா இருக்குதோ ,அதின்ர பிரின்சிப்பலை தலைவராப் போட்டிருக்கினம். சரி, சுற்றுநிருபத்தின்படி, சம தகுதியுடைய அதிபரைத்தான் தலைவராப் போடலாம் எண்டதால பொஸ்கோ பிரின்சிப்பலான சிஸ்டரை இந்து ஆரம்பப்பாடசாலைக்கு போட்டால் பதிலுக்கு பொஸ்கோப் பள்ளிக்கூட மேற்பார்வைக்குழுவுக்கு இந்து ஆரம்பப்பாடசாலை அதிபரைத்தானே தலைவராப் போடோணும். அங்கதான் நிக்கிறார் பணிப்பாளர். இந்து ஆரம்பப்பாடசாலை அதிபரை இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலைக்கும், பெனடிக்ற் பள்ளிக்கூட அதிபரை(அவாவும் சிஸ்டர் தான்) பொஸ்கோவுக்கும் தலைவராப் போட்டிருக்கிறார் பணிப்பாளர்.

இப்ப என்னெண்டா இந்து ஆரம்பபாடசாலை அதிபரின்ர நாணயக்கயித்தை பொஸ்கோ அதிபரிட்ட (சிஸ்டரிட்ட ) குடுத்திருக்கு. அதால தங்கட போட்டிப் பள்ளிக்கூடத்தை விழுத்த இல்லாட்டி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபரை வைச்சுச் செய்யிறதுக்கு பொஸ்கோ அதிபருக்கு நல்ல சான்ஸ் கிடைச்சிருக்கு. பாலுக்குப் பூனையைக் காவலுக்கு விட்ட கதைதான் இது. "பணிப்பாளர் வேற மதம் எண்டதால இந்து ஆரம்பப் பாடசாலையை விழுத்திறதுக்குதான் இப்பிடி ஒரு வேலையை செய்திருக்கிறார்" எண்டு சனம் கதைக்குது. இன்னும் காலம் கெட்டுப்போகேலை. இனியாவது உந்தக் குழுக்களுக்கு சரியானபடி தலைவர்மாரை பணிப்பாளர் போடுவாரோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேகம்

நயினாதீவு, பெப் 10
நயினாதீவு, படகுத்துறை ஆலடி ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-66)

## திறப்பு விழா

தெல்லிப்பழை, பெப். 10
குரும்பசிட்டி மேற்கு, ஈழகேசரி பொன்னையா வீதி ஜெயதேவி கருமாரி அம்மா அறக்கொடை வீடமைப்புத் திட்டத்தினால் ஜெயதேவி கருமாரி அம்மா ஆனந்த நிலையத்தின் திறப்பு விழா தலைவர் ஜெ.ஜெயஜீவன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெறவுள்ளது.
நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை, துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வலி. கிழக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதேஸ்னர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)

## ஆண்டு விழா

அளவெட்டி, பெப்.10
அளவெட்டி தெற்கு, கலைவாணி சன சமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு விழா, கௌரவிப்பு நிகழ்வு, 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு என்பன மேற்படி நிலைய மண்டபத்தில் இன்று பி.ப.3 மணிக்கு இடம்பெறவுள்ளன.
நிலையத் தலைவர் நா. தவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக அளவெட்டி பல.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் செ.இராஜேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ப-36)

## நூல் வெளியீடு


மட்டக்களப்பு, பெப். 10
கலை இலக்கிய வட்டம் நடத்தும் பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வுத் தொடர் - 51 மகுடம் சண்.தவராஜாவின் 'கொரோனாவுடன் வாழுதல்' எனும் கட்டுரை நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புலவர் வி.றஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன், கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் ச.நவநீதன், கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலர் கா.சித்திரவேல், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தலைவர் தேசபந்து மா.செல்வராஜா, கிழக்குப் பல்கலைக்கழக ஆரம்ப சௌக்கிய பீடத் தலைவர் மருத்துவர் கலாநிதி கே. அருளானந்தம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-159)



# மண் அகழ்வுக்கு எதிராக அம்பனில் நேற்று போராட்டம்

**பருத்தித்துறை, பெப். 10**
**'இந்த மண் எங்களின் சொந்த மண்' அம்பன் இயற்கை மண் வளத்தை அழிக்காதே, மண் அகழ்வை உடனடியாக நிறுத்து - என்று வலியுறுத்தி வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச மக்கள் கவனவீர்ப்பு ஆர்பாட்டப் பேரணியை நேற்று முன்னெடுத்தனர்.**

பிரதேச மக்களால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.
பிரதேச செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டு குறித்த பிரதேசத்தில் மண்வளம் சூறையாடப்பட்டு வருவதாகவும் இந்தச் செயற்பாட்டின் மூலம் இயற்கை வளம் அழிக்கப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டினை முன்வைத்தனர். அம்பன் பிரதேச மருத்துவமனை முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டத்தின்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பிரதேச செயலர், பிரதேச செயலகத்தினர் என்போருக்கு எதிராக பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.
மண் அகழ்வை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி அம்பன் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அங்கிருந்து பேரணியாக பிரதான வீதியூடாக நகர்ந்து அம்பன் பகுதியில் மணல் அகழ்வு ஈடுபடும் இடம் வரை சென்றனர். (ஒ-100)



ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மனின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்புற இடம்பெற்றது. (ப-66)

## குருதிக்கொடை

கொழும்பு, பெப். 10
குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சன சமூக நிலைய நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை விக்கினேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பலவேலைகள் தடைப்பட்டுமுடியும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறைகுறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்:** உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**கடகம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் [illegible] கவனம் தேவை. அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உழைப்பால் உயரும் நாள். வாகனத்தைச் சீர்செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள். பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருச்சிகம்:** வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். திடீர்ப் பயணச் செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மகரம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். காணாமல் போன உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள். மனதுக்கு உற்சாகம் கிடைக்கும்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மீனம்:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உடல் நலம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குரங்கின் கையில் பூமாலையும் ரணில் கையில் தேர்தலும்

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப்பிரகடனம் மீதான விவாதம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கூறிய விடயம் தொடர்பில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

'இது தேர்தல் வருடம், எனினும், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் தேர்தல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன என்று அறியமுடிகின்றது. இதற்காக சில சிவில் அமைப்புகளையும் அரசு வளைத்துப்போட்டுள்ளது. அவ்வாறு வளைத்துப்போட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான யோசனை முன் வைக்கப்படவுள்ளது. இதனைச் செய்வதாக இருந்தால் புதிய அரசமைப்பு அவசியம். அது இயற்றப்படும் வரை தேர்தலை ஒத்திவைக்கலாம் என கோரிக்கை முன்வைக்கப்பட்டு, தேர்தலைப் பிற்போடவே முற்படுகின்றனர் ஆட்சியாளர்கள்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இதை வெறுமனே எதிர்க்கட்சிகள் கூறும் வழமையான மேம்போக்கான குற்றச்சாட்டாகக் கடந்துவிட முடியாது. ரணில் விக்கிரமசிங்க என்ற நபருக்கும் தேர்தலுக்கும் எட்டாப் பொருத்தம். அவர் நல்லாட்சி காலத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை எவ்வளவு தூரம் இழுத்தடித்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். பின்னர் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டிய சூழல் எழுந்தபோது, மொட்டுக் கட்சி வசம் ஆட்சி செல்லும் என்ற அச்சத்தால் மாகாணசபைத் தேர்தல் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து இன்று வரையில் மாகாணசபைத் தேர்தலே நடத்தமுடியாத இக்கட்டுக்குள் கொண்டு வந்து தள்ளி விட்டவர் இந்த ரணில் விக்கிரமசிங்க. அத்தோடு அவரது தேர்தல் பயம் போகவில்லை. பின்கதவால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற பதவியைப் பிடித்த பின்னர், உள்ளூராட்சி சபைத் தேர்தலை எப்படி நடக்கவிடாமல் செய்தார் என்பதை கண்முன்னாலேயே எல்லோரும் பார்த்தார்கள். நீதிமன்றம் உத்தரவிட்டும் அதனைச் செயற்படுத்தாமல் சட்டத்தின் ஓட்டைக்குள்ளால் புகுந்து ஓடி, பாதுகாப்பான வளைக்குள் பதுங்கியிருக்கும் 'நரி' அவர். இப்போதும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்பதைப்பற்றிய எந்தவொரு சிந்தனையும் இல்லாதவர். நடந்தால் ஜனாதிபதித் தேர்தல்தான் என்ற நினைப்பில் இருப்பவர். மக்கள் தன்னை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதை உறுதிப்படுத்திய பின்னரே அவர் தேர்தலை நடத்துவார். அதுவரையில் ஜனாதிபதித் தேர்தலை இழுத்தடிப்பதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு ரணில் தயங்கமாட்டார்.

லக்ஷ்மன் கிரியெல்ல சொல்வதைப்போன்று, நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல் என்ற கோஷத்தை முன்னிறுத்தி அரசமைப்பு மாற்றத்தை ஆரம்பித்து காலத்தை இழுத்தடித்து ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் விடுவதற்கான எத்தனங்களில் ரணில் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் அதிகமே. ஏனெனில் மாகாணசபைத்தேர்தல் விடயத்தில், காலவரையறையின்றி அதனை இன்னமும் நடத்தக் கூட முடியாத இக்கட்டுக்குள் சட்டத்திருத்தம் மூலம் கொண்டு சென்று தள்ளிவிட்ட ரணிலுக்கு, ஜனாதிபதித் தேர்தலையும் அவ்வாறான ஒரு சூழ்ச்சி மூலம் பின்தள்ளுவது கடினமானதொரு காரியமே அல்ல.

தனக்கான காலம் கனிந்து வரும் வரையில், எதிரணிகள் களைத்துப்போகும் வரையில் அவர் ஜனாதிபதித் தேர்தலை இழுத்தடிக்கக்கூடும். ரணிலின் இந்தத் தந்திரங்களுக்கும் - சூழ்ச்சிகளுக்கும் எதிராக எவராலும் ஒன்றும் செய்ய முடியாது. குரங்கின் கைப் பூமாலை போல, பொருத்தமில்லாத ஒருவரின் கையில் அதிகாரத்தைக் கொடுத்தால் என்னவெல்லாம் நடக்கும் என்பதற்கு ரணில் மிகச் சிறந்த உதாரணம்.



## தமிழ் அரசியல்கைதி மீது இராணுவ அதிகாரி தாக்குதல்!

**கொழும்பு, பெப். 10**

**தமிழ் அரசியல்கைதி ஒருவரை முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் தாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.**

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதீபன் என்ற தமிழ் அரசியல்கைதி, சிறைச்சாலைக்குள் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மகசின் சிறைச்சாலையில் கடமையாற்றாத, அதேவேளை தேடுதல் நடவடிக்கைக்காக வந்த முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் பிரதீபனை தாக்கியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமையவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-இ)

## 'அஸ்வெசும' கொடுப்பனவு அதிகரிப்பதற்குத் திட்டம்

கொழும்பு, பெப். 10

சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கான 'அஸ்வெசும' கொடுப்பனவுகள் இம்மாதம் முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்களுக்கான கொடுப்பனவும், மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவும் 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 7 ஆயிரத்து 500 ரூபவாக அதிகரிக்கப்படவுள்ளது. முதியோருக்கான கொடுப்பனவு 2 ஆயிரம் ரூபாவிலிருந்து 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பது மிக ஆபத்தானதே!

### சித்தார்த்தன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுத் தமிழ்க் கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுவது ஆபத்தான விடயம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான சித்தார்த்தன்.



நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கொள்கைப் பிரகடன உரையாற்றிய ஜனாதிபதி ரணில், தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்கின்ற அழைப்பை விடுத்திருந்தார். இதையடுத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த அழைப்பை புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் நிராகரித்தார். (ம-66)

## மேற்கு ஆஸியுடன் ஒப்பந்தம்

இந்து சமுத்திர மாநாட்டில் பிரதான உரையாற்ற அவுஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மேற்கு அவுஸ்திரேலியாவின் பிரீமியர், ரோஜர்குக்கிற்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதில் இலங்கைக்கும் மேற்கு அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், இலங்கைக்கும் பேர்த் நகருக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவதற்கும் பிரீமியர் ரோஜர் குக் இணக்கம் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## வருமானம் அதிகரிப்பு

கடந்த ஜனவரி மாதம் அரசாங்கத்தின் வருமானம் 25 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக இவ்வாறு வருமானம் அதிகரித்துள்ளது. 219 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 274 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

**நாளை**

**11.02.2024**

**ஞாயிற்றுக்கிழமை**

**தை – 28**

சுபநேரம் : 09.34 - 11.04

ராகுகாலம் : 05.04 - 06.34

**நாளொரு நல்வார்த்தை**

**மோசமான சாக்குப்போக்குகள் என்பது எதுவும் சொல்லாததைவிட மட்டமானது.**

**– தோமஸ் புல்லர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளை எண்ணமுன்னரே

# தேர்தலில் வென்றுவிட்டதாக அறிவித்தார் நவாஸ் ஷெரிப்

இஸ்லாமபாத், பெப். 10

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி வெற்றிபெற்றுள்ளதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். வாக்குகள் எண்ணிமுடிக்கப்படுவதற்கு முன்னர் நவாஷ் ஷெரீப் விடுத்துள்ள இந்த அறிவிப்பு சர்ச்சையாகியுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வாக்குகளை எண்ணும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

தேர்தல் முடிவுகள் தொகுதிவாரியாக அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியைச் சேர்ந்த சுயேட்சை வேட்பாளர்கள் முன்னிலை பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சியான முஸ்லிம் லீக் நவாஷ் கட்சி வெற்றிபெற்றுள்ளதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று இரவு திடீரென அறிவித்தார். இது பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையாகியுள்ளது. தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுவருவதாக தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியினர் நேற்றுக்காலைமுதல் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள அபான்ஸ் காட்சியறைக்கு (Abans Showroom) 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் A/L முடித்த School Leavers ஆண்கள் மாத்திரம் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு: 077 317 9593

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக கரையோரம் பேணல் மற்றும் மூலவள திணைக்கள இணைப்பாளராக கடமையாற்றும் திரு.நா.விஸ்னுவர்த்தனின் பாசமிகு தந்தை

**ஆறுமுகம் நாகேஸ்வரன்**

அவர்கள் கடந்த 08.02.2024 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரி சங்கம், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த கைதடி நுணாவில் அமரர் அப்பையா குமாரசாமி (குமாரு)அவர்களின் அன்புப் பேரன்

**திரு கீர்த்திநாதன் அச்சுதன்**

அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் மாவட்ட நீதிபதி உயர்திரு ஏ.ஜூட்சன் அவர்கள் முன்னிலையில் நேற்று (09.02.2024) இலங்கைத் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டுவதுடன், இவர் மேன்மேலும் சேவையினைத் தொடர மனதார வாழ்த்துகின்றோம்.

பெரிய மாமா - கு.இராசகுமார் குடும்பம்
சித்தப்பா - குணநாயகம் குடும்பம்
சின்ன மாமா - கு. சிவகுமார் குடும்பம்
கைதடி நுணாவில் - சாவகச்சேரி.

(CR 41770) S-1

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
12 . 04 . 1953



ஆண்டவன் அடியில்
10 . 02 . 2006

**அமரர் லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்**


கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்
அப்பா...

உம் நினைவுடன் என்றும் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்

(CS 27846) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 12 . 1983



மறைவு
30 . 01 . 2024

**குமாரசாமி வஜந்தன்**

காளி கோவிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சுவீடனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி வஜந்தன் அவர்கள் கடந்த 30.01.2024 செவ்வாய்க்கிழமை சுவீடனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் விக்கினேஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற முரளீதரன் மற்றும் லீலாவதியின் அன்பு மருமகனும், துளசியின் அன்புக் கணவரும், அவந்திகா, ஆருத்ரனின் அன்புத் தந்தையும், விஜிதா, காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் கிரிஜா, அஜந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாலா, இளங்கோ, கவிதாஸ், சோபியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸ்விகன், அரோஜன், அஸ்மிதா, இனுஜா, தனுஜா, பானுஜன், யனோசிகன், நிவ்ஜா, லக்சிகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணிவரை சுவீடனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Skogskayrkogrden
Socken Vagen
Stockholm

தகவல்: குடும்பத்தினர்.
மில் லேன், மல்லாகம்.
076 654 5220

(CS 27844) S-1

## மரண அறிவித்தல்



**வைத்திலிங்கம் சிவலிங்கநாதன்**

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவலிங்கநாதன் அவர்கள் நேற்று (09.02.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ராசா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கங்காதேவியின் அன்புக் கணவரும், பிரசாத், வினோத், பாரத் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அனித்தா, கலைச்செல்வி, சிவதுர்க்கா ஆகியோரின் மாமனாரும், லிதுர்ஷா, பிரணித்தா, அகரன், லக்ஷனா, தருண் சாய்சன், ஷபரீஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவயோகமலர், கிருஷ்ணமூர்த்தி, ரங்கநாதன், காலஞ்சென்ற சிவனேசமலர், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கல்லாப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.
பிரசாத் - 077 4884 744
பாரத் - 077 945 1278
வினோத் - 0016043585840

(CS 27848) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுகியகாலக் கடன்கள்; கட்டுப்பாடுகள் தளர்வு

கொழும்பு, பெப். 10


இலங்கை மத்திய வங்கியால், வணிக வங்கிகளுக்கு குறுகியகாலக் கடன்களை வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன. நாணயக் கொள்கைசபை நேற்றுமுன்தினம் கூடிய போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 16ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ–இ)


## ஓராண்டு ஆனதுவோ!

### அமரர் மகேஸ்வரன் தனேசன்

(ஆங்கில ஆசிரியர், யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்)



தோற்றம் 27.10.1974 — மறைவு 22.01.2023

இல்லற வாழ்வின் நினைவுகள்
இன்றளவும் பசுமையாய் நிற்க
பரிவுடன் எமை அணைத்து
- நின்ற காலங்கள்
பறந்தோடிப்போய் ஓராண்டு ஆனதுவோ!
அப்பா நீங்கள் சென்றவழியில்
விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்

(cs.27831) (N-1)


## கிராமிய வங்கி இடமாற்றம்

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி பொதுமக்களின் நலன் கருதி இன்று சனிக்கிழமை தொடக்கம் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள தனியார் கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

சங்கத் தலைவர் ப. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன் கலந்துகொண்டு குறித்த வங்கியைத் திறந்து வைக்கவுள்ளார். (ப–9)


## VACANCIES

Recently developed Medical Institution and Hospital having Vacancies to fulfil as immediate appointment.

**01. CEO** (Chief Executive Officer / AO-Admin Officer)
- Previous experience regarding admin
- Fluent in 03 languages
- Age limit more than 35 years.
- Highly duty concern
- Very attractive salary scale.

**02. Accountant and Accounts Clerk**
- Accountant - previous experience must
- Have leadership to Control of accounts department
- Age limit more than 30 years.
- Good salary package

**03. HRM** (Human Resource Manager)
- Previous experience to Control / Maintanance of staff activity
- Should be > 30 - 35 yrs
- Good salary Package

**04. IT Technician**
- Well experience in IT related work

**05. Ambulance Driver** - Day & Night

**Interview on : 11/02/2024 (Sunday) 9 AM**
**at Sunrise Medi Clinic**
**580, Hospital Road, Jaffna.**

**Contact : 021 222 6069 / 021 222 8460**
**Mob : 070 6820 123**

Candidate can send CV by E-mail: sunrisemediclinic@gmail.com


## பரிசில் நிகழ்வு

யாழ்., பெப்.10

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நிகழ்வானது பாடசாலை அதிபர் பி. தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி. ரவிச்சந்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கவுள்ளார். (ப-159)

## கொள்ளைச் சம்பவம் இருவருக்கு மறியல்!

யாழ்., பெப். 10

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில், சுன்னாகம் மற்றும் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதன் போதே சந்தேகநபர்களை பதின்நான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-125)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 01, முருகமூர்த்தி வீதி, 45/33A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த குமாரலிங்கம் கைம்பெண் கமலாதேவி அவர்கள் 05.10.2011ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1146ம் இலக்கத்தில் நன்கொடை உறுதி மூலம் அவரது மகனான அதே இடத்தைச் சேர்ந்த குமாரலிங்கம் ரவிச்சந்திரனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த குமாரலிங்கம் ரவிச்சந்திரன் 15.11.2011ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு K.M.இராதாக்கிருஷ்ணன் முகதாவில் 755ம் இலக்க அறுதி உறுதி மூலம் அவ்வூரைச் சேர்ந்த கனகராசா சுதர்சனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த கனகராசா சுதர்சன் 01.04.2012ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1337ம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவுக்கும் வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் ஏழாலை மேற்கு ஏழாலையை சேர்ந்த கனகராசா சுதர்சன் 1ம் பகுதியாகவும், இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 2ம் பகுதியாகவும் 11.04.2012 திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1346ம் இலக்கத்தில் திருத்தல் உறுதியொன்று வரைந்துள்ளனர்.

குறித்த ஆதனம் இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 18.07.2012ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு K.M.இராதாக்கிருஷ்ணன் முகதாவில் 89 1ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-198, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகைக்கும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் இல-735, ஆலடிச்சந்தி, மானிப்பாய் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாதேவன் அமிர்தலிங்கமும் பெண் சுமித்திராவும் 1ம் பகுதியாகவும், இல-198, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகையும் 2ம் பகுதியாகவும் 06.11.2013 திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு S.ஜெயச்சித்ரா முகதாவில் 1911ம் இலக்கத்தில்திருத்தல் உறுதியொன்று வரைந்துள்ளனர்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயில்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை, இது நல்லூர் பிரதேச செயலகப்பகுதியில் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/99 கிராம சேவகர் பிரிவிலுள்ள "புங்கடி" நெற்.பர.30 குளி 6.16. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தினால் 2011.10.28ம் திகதி 1620ஏ இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் Lot 1 என காட்டப்பட்டுள்ளது. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தினால் 2011.10.28ம் திகதி 1620ஏ இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் 1 -16 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது இதில் 1-8வரையான பாகங்கள் நெற்.பர 14 குளி 0.95.இதில் Lot 4 என்ற பாகம் நெற்.பர இரண்டு (நெ.ப 02) எல்லைகள்.

கிழக்கு - பொன்னுத்துரை சரோஜாதேவியின் ஆதனம்
வடக்கு - 12 அடி அகலம் கொண்ட பாதை
மேற்கு - மிகுதி ஆதனம்
தெற்கு - 12 அடி அகலம் கொண்ட பாதை இதனடாங்கலும்.

தற்போது சின்னத்துரை இராமநாதனும் பெண் கனகாம்பிகையும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை இராமநாதன் உம் பெண் கனகாம்பிகை உம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(cr.31759) (N-1)



## 15வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகேசு
### சங்கரப்பிள்ளை

(ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்)



தோற்றம் 16.07.1931

மறைவு 26.01.2009

திதி: பிரதமை

ஆண்டுகள் பதினைந்து ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்று உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப்பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே இறைவனை
பிராா்த்திக்கின்றோம்.

"மலரகம்"
கொட்டக்காட்டு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்

(cs/53916) (N-1)



## பெயர் மாற்றம்

1961 ம் ஆண்டு 02 ம் மாதம்
05 ம் திகதி ஊர்காவற்றுறை கரம்பன்
அரசினர் வைத்தியசாலையில் பிறந்த
**ஜசந்தா** ஆகிய நான் இன்று
தொடக்கம் எனதுபெயரை **"லூசியா"**
என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை
இலங்கை ஜனநாயக சோசலிசக்
குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன்
இனிவரும் காலங்களில் அனைத்து
ஆவணங்களிலும் லூசியா என
கையொப்பம் இடுவேன் என
அறியத்தருகின்றேன்.

**லூசியா**

(cs.27834) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## பகிரங்க மூடிய கூறுவிலை

- ➤ வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான LH-9811 இலக்கமுடைய TATA வகை லொறி ஒன்று மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.
- ➤ மூடிய கூறுவிலை மூலம் விற்கப்படும் வாகனத்திற்கான விண்ணப்பப் படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/= (ஐந்நூறு) செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
- ➤ அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் விண்ணப்பம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ➤ மேற்கூறிய வாகனத்தினை மருதங்கேணி தெற்கு தாளையடியில் இருக்கும் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
- ➤ பார்வையிடும் நேரம் 10.02.2024 ந் திகதி தொடக்கம் 24.02.2024 ந் திகதி வரையும் விடுமுறை நாள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரை பார்வையிடலாம்.
- ➤ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி தெற்கு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- ➤ இவ் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 10.02.2024 ந் திகதி தொடக்கம் 24.02.2024 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 24.02.2024 ந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- ➤ கூறுவிலையின்படி லொறியினைப் பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி லொறியினைக் கொண்டு செல்லுதல் வேண்டும்.
- ➤ ஆரம்ப விலை :- லொறி :- ரூபா 40,00,000.00 (நாற்பது இலட்சம்)

**தலைவர்,**
**வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.**

**தொலைபேசி இலக்கம்:**
**021 226 0504**

(CR 41769) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1955



மறைவு 09 . 02 . 2024

## மார்க்கண்டு தனபாலன்

**(முன்னாள் இ.போ.ச ஊழியர்)**

2ம் குறுக்குத் தெரு, கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தனபாலன் அவர்கள் நேற்று (09.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மார்க்கண்டு நாகரத்தினத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமார், ஹிரிகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றெஜிந், அக்ஷயன், திசாயினி, ஷர்யுகன், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், சந்திரசேகரம், ராஜேஸ்வரி, தேவபாலன், காலஞ்சென்ற சயேந்திரன் மற்றும் விஜயலக்ஷ்மி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் குறுக்குத்தெரு,**
**கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 991 9002, 077 761 1028**

(CR 41771) S-1

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப்.10

கலாசார அலுவல்கள் திணைக்களமும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் இணைந்து, இந்த வருட அரச இலக்கிய விழாவின் போது விருதுகள் வழங்கு வதற்காகப் படைப்பாளிகள் மற்றும் பதிப்பாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

விண்ணப்பப் படிவங்களைத் தத்தமது மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்களை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் சுமார் 50 பக்கத்துக்குக் குறையாத நூல்கள் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## கசிப்பு உற்பத்தி; சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, பெப்.10

2 ஆயிரத்து 468 போத்தல் கோடாவும், சட்டவிரோதமான கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்களும் புளியம் பொக்கணை கோரைமோட்டை பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ப-113)


## காணி விற்பனைக்கு

மூளாயிலுள்ள ஐயனார் கோயில் அருகாமையில் உள்ள 12 பரப்புடைய காணி விற்பனைக்குண்டு.

**077 711 6134**

## வேலைவாய்ப்பு

வேர்டெக்ஸ் செக்கிரிடேரியல் பிறைவேட் லிமிட்டெட் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் கணித, விஞ்ஞான மற்றும் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த 30 வயதிற்குட்பட்ட ஆண் அலுவலக உதவியாளர் தேவை.

**பணிப்பாளர்**

**தொலைபேசி இலக்கம்**
**074 264 1005**

## பெயர் மாற்றம்

சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கில் வதியும் **மேரி ராஜேஸ்** ஆகிய நான் எனது பெயரை **மேரி ராஜேஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மேரி ராஜேஸ்வரி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs53912) (N-1)

**மேரி ராஜேஸ்வரி**

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



செவிப்புலன் குறைபாட்டினால் அவதிப்படுகின்றீர்களா? கவலை வேண்டாம் மிகக்குறைந்த தொகையாக ரூ. 11999/- மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடயதாக்கிக்கொள்ளுங்கள். உங்கள் வீட்டுக்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.

**விரையுங்கள் குறைந்த கையிருப்புகள் மாத்திரமே**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**077 434 6245**


# மரண அறிவித்தல்

மலர்வு 06 . 09 . 1951



உதிர்வு 08 . 02 . 2024

## சதாசிவம் இராசலெட்சுமி

ஆசிரியர் வீதி, பெரியரசடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் இராசலெட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (08.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற வசந்தா, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதாசிவத்தின் அன்பு மனைவியும் கஸ்தூரி, காயத்திரி, ஜனாத்திரி, சங்கரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஷ்யந்தன், விஸ்ணுகாந்தன், சுதாகரன், மதனகோகுலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்சயன், அஸ்விகா, ஆர்யன், அபர்னி, அபிமன், அனுசயன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 75ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, இந்தியக் கலைஞர்கள் வழங்கும் இந்தியாவின் பாரம்பரிய நடன நிகழ்வுகள் யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றன. (ப-27)



பச்சிலைப்பள்ளி பிரதேச சமுர்த்தி வர்த்தக சங்க நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சமுர்த்தி முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சமுர்த்தி கிராமிய மட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ப-9)



வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் ஒத்துழைப்புடன் மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் மரம் நடும் நிகழ்வு தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சுதீஸ்னர் சிவகங்கா உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ப-66-9)



யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரிச் சமூகத்தினர் தமது பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் அண்மையில் பாடல் போட்டியில் பங்குபற்றிய கில்மிஷாவின் வெற்றியைப் பாராட்டி கௌரவித்துள்ளனர். நிகழ்வில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கல்லூரி மாணவிகள், அயல் பாடசாலை மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-27)



ஜே/120 கோண்டாவில் தென்மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் நல்லூர் சமூக மருத்துவ உத்தியோகத்தர் கயாலினி கலந்து கொண்டார். (ப-66)




சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழுள்ள அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலுள்ள 3 பாடசாலைகளில் டெங்கு புகைவிசிறல் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. ஜனவரி தொடக்கம் இன்று வரையான காலப்பகுதிகளில் சுமார் 100 டெங்கு நோயாளர்கள் இங்கு அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்தே இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. (சு-ற்றா)


# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## WORLD BANK AND EU FUNDED LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

### Name of Project - Establishment of E-Service Delivery System (Purchasing of Computers, Printers & UPS)

### Contract No - LDSP/NP/JAF/VVTUC/2024/PT3/2

The Democratic Socialist Republic of Sri Lanka *has received* a *loan* from the *World Bank funded* towards the cost of Local Development Support Project (LDSP) and intends to apply part of the proceeds of this *loan* to payments under LDSP PT 3 to the Contract for **Establishment of E-Service Delivery System (Purchasing of Computers, Printers & UPS) LDSP/NP/JAF/VVTUC/2024/PT3/2**

The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valvettithurai Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below:

| Se. No | Contract No | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | LDSP/ NP/ JAF/VV TUC / 2024/ PT3/2 | Establishment of E-Service Delivery System (Computers, Printers &UPS) | 1.70 | 1 Month | 17000.00 | 06.05.2024 | 03.06.2024 |

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award include, in session 04 of the Bidding document. Additional details are provided in the schedule (in Section 5) of the bidding document.
6. Interested bidders may obtain further information from Secretary, Urban Council, Valvettithurai, T.P. No 0212263973, Fax No.0212265166, E-mail urbancouncilvvt@gmail.com and inspect the bidding documents at **Urban Council, K.K.S Road, Valvettithurai** [illegible] **from 12.02.2024 until 04.03.2024between 9.00hrs to 14.00 hrs** on normal working days
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, **Urban Council, K.K.S Road, Valvettithurai from 12.02.2024 until 04.03.2024 from 9.00 hrs to 14.00 hrs** on normal working days upon payment of a non refundable fee of **Rs.3000/-** The method of payment will be by cash.
8. Bids shall be delivered in (Origional & Duplicate) to the address at **Urban Council, K.K.S Road, Valvettithurai** on or before **05.03.2024 before 14.30 hrs** . Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. Bids shall be valid upto **63 days** (06.05.2024)
10. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.
11. The Pre-Bid meeting will be held at Valvettithurai Urban Council, K.K.S Road, Valvettithurai on **22.02.2024** at 14.30 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Valvettithurai Urban Council.**
**Jaffna.Northern Province**
**09.02.2024**

(CR 41773) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுடன்...

இந்து சமுத்திர நாடுகளின் 7ஆவது உச்சிமாநாடு அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இடம்பெற்று வருகின்றது. இந்த மாநாட்டில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்கும் வகையிலும், பிராந்தியத்தின் விநியோக மையமாக இலங்கையை மாற்றுவதற்கும், இந்தியாவுடனான புதிய தரைவழித் தொடர்புகளுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து இலங்கை ஆராயவேண்டும். அதற்குரிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்தியப் பெருங்கடல் வெப்பமயமாதல் மற்றும் கடல் மட்டம் உயர்வதன் அபாயம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்க மற்றும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்குக் காலநிலை நீதியை உறுதிப்படுத்த வெப்ப வலய காலநிலை முன்முயற்சிகள் மற்றும் சர்வதேச காலநிலை பல்கலைக்கழகம் போன்ற முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும்.

இந்து சமுத்திரத்தின் சவால்களை எதிர்கொள்ளவும், பாதுகாப்பான நிலையான கடல் சூழலை உருவாக்கவும் இந்து சமுத்திர எல்லை நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதும், பரந்துபட்ட இந்து சமுத்திர வலயத்தை கட்டமைக்க வேண்டியதும் இன்று அவசியமாகும். இது குறித்து இந்து சமுத்திர நாடுகள் கவனம் செலுத்த வேண்டியது காலத்தேவையானது.

2050ஆம் ஆண்டளவில் இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி 8 மடங்காக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதும் இன்றியமையாதது - என்றார். (அ-ம)

## தனக்காக...

எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் என்ன நடக்கின்றது? ஊழல், மோசடிகள் தொடர்பில் கதைப்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக 'ஒன்லைன்' பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கு ஏதுவான வகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

பொருளாதாரம் முன்னேறிவருகின்றது எனக் கூறுகின்றனர். ஆனால் மின்கட்டணம் மும்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன. மறுபுறத்தில் ஜனநாயக வழியில் இடம்பெறும் போராட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன. அண்மையில் நடைபெற்ற போராட்டம் மீது கூடத் தாக்குதல் நடத்தப்பட்டது. ரணிலுக்காக நாம் 25 வருடங்களாக அடிவாங்கினோம், இன்று அவர் எம்மை அடிக்கின்றார் - என்றார். (அ-ம-44)

## விரைவில்

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற ...ங்களின்போது பலாலி கிழக்கில் உள்ள விவசாயக் காணிகளை விடுவிக்குமாறு கோரியிருந்தோம். தற்போது அரசாங்கம் அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்குச் சாதகமான கடிதப்பரிமாற்றங்கள் தற்போது மாவட்டச் செயலகத்துக்குக் கிடைக்கப்பெறுகின்றன. ஜனாதிபதியும் பலாலி கிழக்கு காணிகள் விடுவிப்புத் தொடர்பில் அனுமதி வழங்கியுள்ளார். காணித் திணைக்களங்களின் அதிகாரிகள் விரைவில் கொழும்பில் இருந்து வரவுள்ளனர். இதன்போது சில அளவீட்டுப் பணிகளும் இதர நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-125)

## நிதிக்குழு....

ஹர்ஷ டி சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச நிதி பற்றிய குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவுக் குழுவால் நியமிக்கப்பட்டிருப்பதுடன், இதன் தலைவராக கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் நேற்று சபாநாயகரால் சபையில் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய செஹான் சேமசிங்க, சீதா அரம்பேபொல, சுரேன் ராகவன், அனுப பஸ்குவல், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரவூப் ஹக்கீம், வஜிர அபேவர்தன, விஜித ஹேரத், மஹிந்தானந்த அலுத்கமகே, துமிந்த திஸாநாயக்க, சந்திம வீரக்கொடி, நாலக கொடஹேவா, நிமல் லான்சா, எம்.ஏ.சுமந்திரன், கவிந்த ஹேஷான் ஜயவர்தன, மயந்த திசாநாயக்க, ஹர்ஷண ராஜகருணா, யூ.கே.சுமித் உடுகும்புர, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுரு தொடன்கொட, பிரேம்நாத் சி.தொலவத்த, மதுர விதானகே, எம்.டபிள்யூ.டி. சஹன் பிரதீப் விதான ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-44)

## கால்நடைகள்...

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மாவட்டச் செயலர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் அனலைதீவு பகுதியில் மாடொன்று தலையும் தோலுமாக மீட்கப்பட்டது. இது தொடர்பான செய்திகளையும் ஒளிப்படங்களையும் பார்த்தேன். ஒரு கால்நடையை இழப்பதென்பது பண்ணையாளரின் பெரும் இழப்பு.

வடமராட்சி மற்றும் தீவகப் பகுதியில் இதுகுறித்து அதிகளவு முறைப்பாடுகள் பதிவாகின்றன. பொலிஸார் இது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இல்லையேல் மேலதிக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். இது தொடர்பில் தற்போது நியமனம் பெற்று வந்துள்ள யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் அறிவிக்கவுள்ளேன் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தீவகத்துக்குப் பொறுப்பான கால்நடை மருத்துவ அதிகாரி, மாடுகளைச் சட்டவிரோதமாக இறைச்சியாக்குவோரை பொலிஸார் கைதுசெய்த பின்னர் உடனடியாக அவர்களை விடுவிக்கின்றனர். இதனால் இவ்வாறான குற்றச்செயல்களைக் குறைக்க முடியாதுள்ளது. முறையிட்டும் பயனில்லை என்ற சலிப்புத்தன்மையில் மக்கள் தற்போது முறைப்பாடுகளை வழங்க முன்வருவதில்லை என்று சுட்டிக்காட்டினார். (அ-ம-125)


# ஐந்து கோரிக்கையை வலியுறுத்தி யாழ்ப்பாண மீனவர்கள் பேரணி!

யாழ்ப்பாணம், பெப். 10

ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறுகோரி யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட மீனவர் சட்ட வரைபை நிராகரித்தல், வெளிநாட்டு மீனவர்கள் இறக்குமதி செய்தலை தடுத்து நிறுத்தல், வெளிநாட்டு படகுகளுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது. வெளிநாட்டுப் படகுகளில் இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரல், கடற்றொழிலாளர்களுக்கான வரவு- செலவுத் திட்டத்தை மீளபரிசீலிக்கக் கோரல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டம், பின்னர் பேரணியாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்றது. பின்னர் ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கியமனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ம-27)



## 'அக்ரார்'...

பகுதிகளில் பயன்படுத்துவதை நிறுத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உத்தரவிட்டார்.

தென்னைகளில் பரவும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன்போது விவசாயத் திணைக்களத்தினர், 'என்காசியா' என்ற உயிரியல் தடுப்பு முறையினைப் பயன்படுத்தி தென்னைகளை மீள்நிலைக்குக் கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாயத் திணைக்கள அதிகாரிகள், தென்னை அபிவிருத்தி அதிகாரசபையினர், 'யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் உள்ள தென்னைகளில் 75 வீதமானவை தொற்றுக்கு உட்பட்டுள்ளன. ஆதலால், நோயின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு மரங்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவர 'அக்ரார்' என்ற இரசாயனத்தைப் பயன்படுத்தவுள்ளோம்' என்று குறிப்பிட்டனர்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அக்ரார் இரசாயனத்தை தென்னை மரத்தில் விசிறியவுடன் சுமார் 48 மணி நேரம் வரை அந்த பகுதியில் யாரும் செல்லக்கூடாது. மேலும் நீர் நிலைகள் உள்ள இடங்களிலும் இதனை விசிறக் கூடாது. பொதுமக்களுக்கு நுரையீரல் பாதிப்பினை ஏற்படுத்தும் பெரும்பாலான பகுதிகளில் இது தவிர்க்கப்பட வேண்டிய மருந்தாகக் காணப்படுகின்றது' என்று சுட்டிக்காட்டினார்கள்.

இதையடுத்தே, சுகாதார நலன்கருதி குடியிருப்பு நிறைந்த பகுதிகளில் 'அக்ரார்' இரசாயன மருந்தைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உத்தரவிட்டார். (அ-ம-125)

## 47 குழந்தைகள்...

ணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 5 ஆயிரத்து 510 குழந்தைகள் பிறந்துள்ளன என்றும், அத்துடன் ஆயிரத்து 703 இறப்புகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-125)

## தாக்குதலுக்குள்ளான...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், பிற மனிதத் தாக்குதல்களாலும் வாள்வெட்டுகளாலும் காயமடைந்து 983 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். (அ-ம-125)

## படையெடுக்கிறது...

அவதானிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

தேக்கு, வேம்பு, பலா உள்ளிட்ட வேறு பயன்தரு மரங்களில் வெள்ளை ஈக்களின் இந்தத் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. நான்கு வகையான வெள்ளை ஈக்கள் உலகளாவிய ரீதியில் உள்ளன. இந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வெள்ளை ஈக்களின் வகை 'அலிரோடிக்கா டிஸ்பேர்சஸ்' என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளை ஈக்களின் பரவலைத் தடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் தற்போது மும்முரமான செயற்பாட்டில் இறங்கியுள்ளது.

அதனடிப்படையில் 'என்காசியா' என்ற உயிரியல் முறை தடுப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த 'என்காசியா' தடுப்பினைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு தபால் செலவு மட்டுமே ஏற்படும். வலயம் வலயமாக இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது - என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில்

# 70 அதிபர்கள் இன்னும் பொறுப்பேற்கவில்லை

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

385 பேர் வடமாகாணத்தில் புதிய அதிபர்களுக்கான நியமனத்தைப் பெற்றிருந்தார்கள். எனினும், 70 அதிபர்கள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை - என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

யாழ்., ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் சேவைநயப்பு விழாவொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிபர் நியமனம் பெற்றுக்கொண்டவர்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தமது பதவியைப் பொறுப்பேற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களில் 20 பேர் தமக்கு அதிபர் நியமனம் வேண்டாம். ஆசிரியர்களாகவே இருக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர். ஏனையவர்கள் தமது வீடுகளுக்கு அண்மையில் அமைந்துள்ள பாடசாலையில் அதிபர் கடமையை மேற்கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கல்விப் புலத்தில் புள்ளிகளின் அடிப்படையில்தான் எல்லா நியமனமும் இருக்கும்.

அதிபர் நியமனங்களை வழங்கிய முதல் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுகின்றது. நேற்று (நேற்று முன்தினம்) மத்திய மாகாணத்துக்கான அதிபர் நியமனம் வழங்கப்பட்டது. அந்த மாகாணத்தில் அதிபர் போட்டிப் பரீட்சையில் 300 பேர் சித்தியடைந்த நிலையில் அவர்களில் 150 அதிபர்களுக்குப் புள்ளிகள் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் ஏனையவர்களை வேறு மாகாணங்களுக்குச் செல்லுமாறு கைகழுவி விட்டுவிட்டார்கள். அவர்கள் தாம் வடக்கு மாகாணத்திற்கு வந்தால் பாடசாலைகளில் நியமனம் தருவீர்களா? என எம்மிடம் கேட்கிறார்கள். ஆனால், அவ்வாறு உள்வாங்கினால் வடக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசத்தில் நீண்டகாலம் பணியாற்றிய அதிபர் சேவையில் உள்வாங்கப்படாத அதிபர்களுக்குத் தடையாக அமைந்துவிடும் என எமது செயலாளரிடம் தெரிவித்திருந்தேன்.

அதேபோன்று பட்டதாரி ஆசிரியர்களுக்கு நாம் நியமனம் வழங்க முயற்சி செய்தோம். அவ்வாறான முயற்சியை மேற்கொண்ட போது முன்னைய ஆட்சியாளர்கள் கொண்டு வந்த நடைமுறைக்கமைய முகாமைத்துவப் பணியாளர்களின் நியமனக் கடிதத்தில் நீங்கள் ஆசிரியர் சேவைக்கு விரும்பினால் மாறலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் எங்களைச் சேவையில் இணைத்த பின்னர் தான் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்க முடியும் என நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர். இன்னும் ஒருவாரத்துக்குள் இதற்கொரு முடிவு வரும் - என்றார். (ம-66)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலராக ஜெயசீலன் நேற்றுப் பொறுப்பேற்பு!



யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளராகக் கடமையாற்றிய இ.த.ஜெயசீலன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ம-125)

## அம்மாடி!!! இவ்வளவு பெரிசா?

நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஊழியர்களால் இலங்கையின் மிகப்பெரிய பீட்சா உருவாக்கப்பட்டுள்ளது.

உலக பீட்சா தினத்தை முன்னிட்டு ஹோட்டல் வளாகத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலின் நிறைவேற்று சமையல் கலைஞர் துமிந்த வணிகசேகர இதற்கான முயற்சியை எடுத்திருந்தார்.


பீட்சாவை உருவாக்க தக்காளி, மொஸரெல்லா சீஸ், கோழி இறைச்சி, 4 வெவ்வேறு நிறங்கள் மற்றும் சுவைகள் கொண்ட பெல் பெப்பர்ஸ், ஒலிவ் எண்ணெய் மற்றும் பச்சை வெங்காயம் என்பன பயன்படுத்தப்பட்டன.

50 அங்குல நீளமும் 12 கிலோ எடையும் கொண்ட இந்த பீட்சா 8 நிமிடங்களில் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஹோட்டல் வளாகத்துக்கு பீட்சாவை சுவைக்க பலர் வருகை தந்துள்ளனர்.



8 பேர் ஒரே நேரத்தில் ரசிக்கும் வகையில் 25 அங்குல பீட்சா துண்டுகள் தயாரிக்கப்பட்டு பரிமாறப்பட்டது. (ஒ-இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 11.06.1958

உதிர்வு 09.02.2024

## சிதம்பரநாதன் சிறீரஞ்சன்

**(உரிமையாளர் - அபிராஸ் பாமசி, வவுனியா)**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தினை வதிவிடமாகவும் கொண்ட அபிராஸ் பாமசி உரிமையாளர் சிதம்பரநாதன் சிறீதரன் அவர்கள் நேற்று (09.02.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் பத்மாவதி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் பத்மாவதி தம்பதியரின் மருமகனும், கந்தகௌரியின் அன்புக் கணவரும், கௌதமி (கனடா), ஸ்ரீராகவன் (கனடா), கௌசிகா (Pharmacist - வவுனியா) கௌசாலினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (கனடா), பாலமுகுந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்பாசன திணைக்களம், அநுராதபுரம்), ஆதவன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், அக்ஷயா, அனனியா, மாதுகை ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற ஸ்ரீகரன் மற்றும் ஸ்ரீமோகன், ஞானகௌரி யோகராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வைரவர் புளியங்குளம் இல்லத்தில் நாளை (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறி கந்தகௌரி (மனைவி),**
**024 2222 592**
**சிறி ஸ்ரீராகவன் (மகன்)**
**கு.பாலமுகுந்தன் (மருமகன்).**
**077 114 3039**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28029) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வம் எம்.பி.யின்

# தாயாரின் உடல் நல்லடக்கம்



கொழும்பு, பெப். 10

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயார் அமிர்தலிங்கம் செபமாலையின் இறுதி நல்லடக்கம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயார் தனது 84 ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

அவரது பூதவுடல் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்திலுள்ள அவரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதில் பிரதமர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு விடத்தல்தீவு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ச-56)

**Techna**
Technical Institute
Techna
க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

**இலவச செயன்முறை வகுப்புக்கள்**

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

**A/L 2023 பிரிவு** பிரிவு 02 ஆரம்பம் — 13.02.2024 மாலை 2.00 PM

அனைத்து செயன்முறைகளும் இறுதிப்பரீட்சை காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்...

இலவச செயன்முறை **A/L 2024 பிரிவு** — ஆரம்பம் 14.02.2024 மாலை 3.00 PM

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
Technatechnicalinstitute
077 170 3549

**வேலையாள் தேவை**

Guest House ஒன்றுக்கு அனுபவமுள்ள 45 வயதுக்கு மேற்பட்ட வேலையாள் தேவை.

077 818 6460

**பணிப் பெண் தேவை**

யாழ். பிரதேசத்தை சேர்ந்த கொழும்பில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
உணவு தங்குமிடம் இலவசம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
077 3866 250

**கடை வாடகைக்கு**

ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் LOLC காப்புறுதி நிறுவனத்திற்கு கீழ்தளத்தில் உள்ள (43x15 1/2) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 071 735 0067

**வேலைவாய்ப்பு**

யாழ்நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தக சாலைக்கான வேலைவாய்ப்பு.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(cs.53916) (N-1)
தொடர்பு: 077 494 9683 077 077 6469

**மலிவு விற்பனைக்கு**

பாடசாலை மாணவர்களுக்கான தரமான காலுறைகள் (Socks)
076 315 6470

**வேலைக்கு ஆள் தேவை (பெண்)**

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் அடுப்பு வேலைக்கு நன்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு: 074 391 0343

**அரிசி தானியங்களை அரைப்பவர்களுக்கு**



இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 10" மற்றும் 12" கிறைண்டர். 230kg எடை கொண்டதும் உதறல்கள் அற்றதுமான, இந்தியன் மோட்டர் 5 HP மற்றும் 7.5 HP இல் இயங்கக் கூடிய புடட் மொடல் (மட்டை வைக்கத் தேவையில்லை) கிறைண்டர் உத்தரவாதத்துடன் இப்பொழுது எம்மிடம்.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

# சிறுநீரகம் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயதுடைய $O^+$ குருதிவகையைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு அதே ஒத்த குருதிவகையைச் சேர்ந்த ($O^+$) சிறுநீரகம் அவசரமாகத் தேவை.

தொடர்பு: 077 467 7623 077 234 5459

ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

நிகழும் சோபகிருது வருடம் தை மாதம் 28 ஆம் திகதி (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 11.40 மணிவரை வரும் சுபயோக சுபமுகூர்த்தத்தில்

எமது சிரேஷ்ட புதல்வன் **டெல்ரனுக்கும்** — எமது சிரேஷ்ட புதல்வி **கஜவாணிக்கும்**

**ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ஆலய மண்டபத்தில்**

திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழச் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திருமதி சுந்தரேசன் ராஜினி
திருமதி துரைசாமி வைஜெயந்திமாலா
திரு.திருமதி திருச்செல்வம் லோகராணி

இல.19/3, கல்பொத்த வீதி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு – 13


திரு.திருமதி நகுலேஸ்வரன் ஜெயபாமா
(கண்ணன் - பாமா)
திரு. முகுந்தன் நகுலேஸ்வரன்
திரு.திருமதி யதுஷ்யன் கௌசல்யா

இல.19, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(cs.27815) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில் 24.05.1960 — இறைவன் அடியில் 23.01.2023

அமரர்

**அப்புத்துரை சுந்தரலிங்கம்**

ஓராண்டு காலம் உருண்டோடி மறைந்தாலும்
உங்கள் உயிர் மூச்சு மறைவதில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒழியாது
நெஞ்சத்தின் நினைவாய் நிலையாய் என்றும்
எங்களோடு எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழிநடத்திச் செல்ல
உங்களை வணங்குகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மகள், மகன், மருமகன், சகோதரிகள், மைத்துனர்கள், மற்றும் மருமக்கள்.

திருமதி ய. சுந்தரலிங்கம்
No.7B 4 வது ஒழுங்கை,
வைரவப் புளியங்குளம்,
வவுனியா.

(CS 25844) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org